சுருக்கம்

மறுவாழ்வு – அயலகத் தமிழர் நலன் – தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு – புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச்சங்கங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் இச்சங்கங்களின் மூலமாக நம்முடைய கலை, இலக்கியம் மற்றும் பண்பாடு பரிமாற்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக ரூ.4 கோடி சுழல் நிதியாக ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொது(மறுவாழ்வு.2)த் துறை

அரசாணை(நிலை)எண்.200 நாள்.05.04.2023.
சுபகிருது வருடம், பங்குனி–22
திருவள்ளுவர் ஆண்டு–2054
படிக்கப்பட்டது:

1. தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண்.842, நாள் 06–10–2021.
2. அயலகத் தமிழர் நலன் (ம) மறுவாழ்வுத் துறை ஆணையரின் கடித ந.க.எண்.இ1/12708/2021, நாள்.24.12.2021.
3. அரசுக் கடிதம் எண்.49064/ம.வா.2/21–1, நாள்.04.02.2022.
4. அயலகத் தமிழர் நலன் (ம) மறுவாழ்வுத் துறை ஆணையரின் கடிதம் எண்.இ1/12708/2021, நாள் 31.01.2023.

*****

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க அறிவித்த பல்வேறு நலத்திட்டங்களுள் கீழ்க்காணும் அறிவிப்பும் அடங்கும்:–

**"புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்படும். இச்சங்கங்களின் மூலமாக நம்முடைய கலை, இலக்கியம் மற்றும் பண்பாடு பரிமாற்றங்கள் நடைபெறும். இதற்காக ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்".**

2. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்கும் முகமாக, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் கீழ்க்கண்ட கருத்துருவினை தெரிவித்து அதனை செயல்படுத்திட ஏதுவாக ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யுமாறு அரசினை கோரியுள்ளார்:–

(i) உலகின் பல நாடுகளிலும் உள்ள தமிழ்ச் சங்கங்கள் பன்னெடுங்காலமாக தமிழ் மொழி, புலம்பெயர் தமிழ் மக்கள் மற்றும் நம் தாய்

த.பி.பா..

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக அருஞ்சேவையாற்றி வருகின்றனர். இவ்வாறு உள்ள தமிழ்ச்சங்கங்களை ஒன்றிணைப்பதன் மூலம் அவற்றின் சேவையை ஒருங்கிணைத்து, மேலும் செம்மைப்படுத்த இத்திட்டம் வழிவகுக்கும். இதன் வாயிலாக நம் தாய்த்தமிழ்நாட்டின் இயல், இசை, நாடகம் என முத்தமிழ் சார்ந்த கலை, இலக்கியம் மற்றும் பண்பாடு தொடர்பான சிறந்த கலைஞர்கள் மூலம் பயிற்சி, கலை நிகழ்ச்சிகள், பயிலரங்கங்கள், கருத்தரங்கங்கள், புத்தாக்கம் (ம) பயிலகம் நிறுவுதல் என பல சேவைகளையும் நிறைவேற்ற இயலும்.

(ii) இதன் சங்கமமாக, ஆண்டு தோறும் ஜனவரி–12 ஆம் தேதி திட்டமிடப்பட்டுள்ள "அயலகத் தமிழர் தின விழாவில்" சிறந்த கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கவும், அவர்களின் படைப்புகளை அங்கீகரிக்கவும் மற்றும் கருத்தரங்கங்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வளரும் இளம் தலைமுறையினர் இடையே தமிழ்நாட்டின் கலை, இலக்கியம் மற்றும் பண்பாடு தொடர்பான விழிப்புணர்வையும், ஆர்வத்தையும் தூண்டி அவர்கள் தமது தாய் மொழியை அடுத்தடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லவும், வேரூன்றவும் இத்திட்டம் பெரிதும் வழிகோலும்.

(iii) தமிழர் நலச்சங்கங்களை ஒருங்கிணைத்தல்

- தமிழர்கள் அதிகம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளை அடையாளம் காணுதல்.
- அந்தந்த நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள் வழியாக தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளை அடையாளம் காணுதல்.
- உலகெங்கும் உள்ள தமிழ்ச் சங்கங்கள் தங்கள் அமைப்பு பற்றிய முழுமையான தகவல்களை பதிவு செய்ய இணையதளம் ஏற்படுத்தி அதில் மேற்படி தமிழ்ச் சங்கங்களை பதிவு செய்யக்கோருதல்.
- இணையதளத்தில் பதிவு செய்த தமிழ் சங்கங்களின் உண்மைத் தன்மையினை அங்கீகரித்து, பல்வேறு நாடுகளில் உள்ள சங்கங்களுடன் ஒருங்கிணைத்தல்.
- ஒருங்கிணைந்த தமிழர் நலச்சங்க உறுப்பினர்களுக்கு தமிழ் மொழி, பண்பாடு, கலாச்சாரம், தமிழர் நாகரீகம், தமிழர்களின் வாழ்வுக்கான வழிகாட்டுதல், விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்துதல்.
- பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர் நலச்சங்கங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் அந்நாடுகளில் ஏற்படும் சூழல் மாற்றங்கள், புதிய சட்டங்கள், சவால்கள் மற்றும் அவற்றை எதிர்கொள்ள தேவைப்படும் முன்னெடுப்புகள் ஆகியவற்றை அறியவும் புதியதாக பயணிப்போர் தங்களை தயார் செய்து கொள்ளவும் இவ்வொருங்கிணைப்பு பெரிதும் உதவும்.

(iv) தமிழர்களின் கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டு பரிமாற்றங்கள்:

பதிவுசெய்யப்பட்ட தமிழ்ச் சங்கங்கள் மூலம் தமிழர்களின் கலை, இலக்கியம், பண்பாட்டினை மேம்படுத்துவதற்காக கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- உலக அளவில் உள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழுங்களில் தமிழ் இருக்கைகளை அமைப்பதற்கான தொடர் நடவடிக்கைகள் எடுத்தல்.
- வெளிநாடுகளில், தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் கலை மற்றும் கலாச்சார விழாக்கள், கலாச்சார இரவு மற்றும் தமிழர் கலை இரவு நிகழ்ச்சிகள் கொண்டாடச் செய்தல்.
- தமிழர்களின் தொன்மை வாய்ந்த கலை மற்றும் நாகரீகத்தை போற்றும் கண்காட்சி அரங்குகள் அமைத்தல்.
- மேடை நாடகம், வீதி நாடகம் மற்றும் அரங்கு நிகழ்வுகள் மூலம் தமிழர் கலைகளை போற்றுதல்.
- சமூக வளைதளம் மற்றும் இணையவழி தமிழர் ஒருங்கிணைப்பு கருத்தரங்கு மாநாடு நடத்துதல்.
- தமிழர்கள் வாழும் பகுதியில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் கல்வி மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலம் தமிழர் பண்பாடு மற்றும் கலாச்சார விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- புலம்பெயர்ந்த நாடுகளில் நமது கலை மற்றும் பண்பாடு போற்றும் நிகழ்வுகளான கூத்து பறையாட்டம், காவடியாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், தோற்பாவை கூத்து, நாதஸ்வர நைய்யாண்டி மேளம், சிலம்பாட்டம், தேவராட்டம், கோலாட்டம் மற்றும் மேடை நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் பண்பாட்டை விளக்குதல்.
- இந்திய நாட்டு கலைகளுடன் வெளிநாட்டு கலைகளை ஒப்பீடு செய்து உலகிற்கு அறிமுகப்படுத்துதல். நுண் கலைகள் மற்றும் பயன்பாட்டு கலைகளை வகைமை செய்து, மனித ஆக்கத்திறனின் பன்முகத்தன்மையை வெளிப்படுத்துதல்.
- இருபதாம் நூற்றாண்டின் கட்டிடக்கலை, நடனம், சிற்பம், இசை, ஓவியம், கவிதை, திரைப்படம், ஒளிப்படவியல், வரைகலை ஆகிய நிலைகளில் புதுமையாக வெளிப்படுத்துவதன் மூலம் உலகத் தமிழர்களின் கலைத் திறன் மேம்பாட்டை வெளிக்கொணர்தல்.

(v) புலம்பெயர் தமிழர்களுக்கான விருதுகள் மற்றும் படைப்புகளுக்கான அங்கீகாரம்

- தமிழர்களின் கலை மற்றும் பண்பாடு தொடர்பான வளர்ச்சிக்குப் பாடுபடும் நபர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு விருது வழங்கி கௌரவப்படுத்துதல்.

- ஆண்டுதோறும் "புலம்பெயர்ந்த உலகத்தமிழர் நாள்" ஜனவரி 12-ஆம் தேதி தமிழர்களை ஒருங்கிணைத்து கலை நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலம் அவர்களை அங்கீகரித்தல்.
- புலம்பெயர் தமிழர்களை நலவாரியங்களில் உறுப்பினராக்கும் முயற்சிகள் மேற்கொள்ளுதல்.
- சொற்பொழிவுகள், நூல் வெளியீடுகள் மூலம் புதிய படைப்புகளை ஊக்குவித்தல்.
- பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல் சார்ந்த பன்முக படைப்புகளை ஆராய்ந்து பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம் ஆண்டுதோறும் நடத்தி சிறந்த படைப்புகளுக்கு விருதுகள் வழங்கி சிறப்பிப்பது.

இத்தகைய பன்முக சிந்தனைகளை செயல்படுத்தும் விதமாக உலகத் தமிழ்ச்சங்கங்களை ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து தாய்த் தமிழ்நாட்டில் சங்கமிக்க வைத்தல்.

3. தமிழர்களின் கலை, இலக்கியம் மற்றும் பண்பாடு போன்ற தகவல்கள் உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களிடையே சென்றடைந்து, தமிழ்ச்சமுதாயத்தின் பெருமையை அவர்கள் உணர்வதற்கும், அதுமட்டுமின்றி வளர்ச்சி பெற்ற நாடுகளில் உள்ள தமிழ்ச்சங்கங்கள் மூலம் அங்குள்ள தொழில்நுட்பம் தொடர்பான மாநாடுகள், கருத்தரங்கங்கள் நடத்தி கருத்துக்களை பரிமாற்றம் செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சி அடைய ஏதுவாக இருக்கவேண்டுமென்றும், இது மாதிரியான கருத்துப் பரிமாற்ற நிகழ்வுகள் ஆண்டுதோறும் ஜனவரி 12-ஆம் நாள் நடைபெறும் "புலம்பெயர் தமிழர் தினம்" விழாவுடனும் இணைத்து நடத்தப்பட வேண்டுமென்றும். இத்திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக ரூ.4 கோடியினை சுழல் நிதியாக ஒதுக்கீடு செய்து தருமாறும், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை, ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

4. மேற்கூறிய சூழ்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 06.10.2021-அன்று வெளியிட்ட செய்தி வெளியீட்டினை நிறைவேற்றும் விதமாக, அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்தபின், அதனை ஏற்று, தமிழர்களின் கலை மற்றும் பண்பாடு போன்ற தகவல்கள் உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களிடையே சென்றடைந்து, தமிழ்ச் சமுதாயத்தின் பெருமையை உணரவும், வளர்ச்சி பெற்ற நாடுகளில் உள்ள தமிழ்ச்சங்கங்கள் மூலம் அங்குள்ள தொழில்நுட்பம் தொடர்பான மாநாடுகள் மற்றும் கருத்தரங்கங்கள் நடத்தி கருத்துப் பரிமாற்றம் செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சியடைய ஏதுவாக இருக்குமென்பதாலும், இம்மாதிரியான கருத்துப் பரிமாற்ற நிகழ்வுகள் ஜனவரி 12-ஆம் நாள் நடைபெறும் "புலம்பெயர் தமிழர் தினவிழாவில்" இணைத்து நடத்தப்படுவதற்காகவும், மேற்கூறிய இத்திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக ரூ.4,00,00,000/- (ரூபாய் நான்கு கோடி மட்டும்) சுழல் நிதியாக ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

"2235 சமூக பாதுகாப்பும் நலனும் - 01 மறுவாழ்வு - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - AH வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன் - 305 அலுவலகச் செலவுகள் - 02 ஏனைய சில்லறைச் செலவினங்கள். (IFHRMS: த.தொ.கு 2235 01 800 AH 305 02)".

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி குறித்ததாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி(வ.செ.பொ.-I)த் துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பு ஆண்டிற்குத் தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி(வ.செ.பொ.-I)த் துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய விளக்கக் குறிப்பினை தவறாது உரிய நேரத்தில் நிதி(பொது/வ.செ.பொ.-I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. இவ்வரசாணை நிதி(பொது)த் துறையின் அலுவல் சார்பற்ற எண்.8423/நிதி(து.செ/நிதி(பொது)/2023, நாள்.05.04.2023, ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. (இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.0001 (ஒன்று). (IFHRMS ASL No.2023040001).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

டி.ஜகந்நாதன்
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>
ஆணையர்,
அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-8.

த.பி.பா..

நகல்

மாநில கணக்காயர், சென்னை-18.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மை செயலாளர்-1, சென்னை-9.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.

சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.

நிதி(பொது/வ.செ.பொ.I/II/வ.வ.I)த் துறை, சென்னை-9.

பொது(ம.வா.I/III)த் துறை, சென்னை-9.

பொது(அ.ந.மு.1)த் துறை, சென்னை-9.

பொது(பல்வகை)த் துறை, சென்னை-9.

இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

5/4/2023.

பிரிவு அலுவலர்

5/04/2023